அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 03/95

எனது இல.1/543 ச/ 02/டி/02 /94(1)
அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,
1995, பெப்ரவரி 06 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

## 1994-09-09ஆந் திகதியிடப்பட்ட சம்பள மீளாய்வு, முரண்பாடுகள் குழு அறிக்கை

நடுத்தரத் தொழில்நுட்பச்சேவை (ந.த.தொ.சே.) சம்பள மீளாய்வு காரணமாக எழுந்துள்ள விடயங்கள்பற்றி ஆராய்ந்து விரைவான அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட சம்பள மீளாய்வு, முரண்பாடுகள் குழுவின் விதப்புரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

2. பல்வேறு சேவைகளினதும் வேறுபட்ட பண்புகளையும், அச்சேவைகளின் சம்பள அளவுத் திட்டங்களையும் பரிசீலனை செய்து. 1994-07-25ஆந் திகதிய 27/94, 1994-08-08ஆந் திகதிய 29/94, 1994-08-11ஆந் திகதிய 30/94, ஆகிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்துவதால் பாதிப்புக்குள்ளாகும் சேவைகளின் சம்பள அளவுத் திட்டங்கள் தனித்தனியாகச் சம்பள மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. அதனால், 29/94, 30/94 ஆகிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில்அறிவிக்கப்பட்ட அண்மைய சம்பள அதிகரிப்புகளினின்றும் விடுபட்ட உங்கள் நிருவாகத்துக்குட்பட்ட சேவைகளில் இப்போது நிலவும் சம்பள அளவுத் திட்டங்களைப் பரிசோதனை செய்து, முன்னுரிமைக்குரிய விடயமாகக் கொண்டு ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காகச் சம்பள, ஊழியர் காப்புக் குழுவுக்கு ஆற்றுப் படுத்துவதற்காக அமைச்சரவைக்கு அமைச்சுப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க(தகவலுக்காகவும் ஆராய்வதற்காகவும் முற்பிரதியொன்று சம்பள, ஊழியர் கோப்புக்கும், நிதிஅமைச்சுச் செயலாளர், தாபனப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட வேண்டும்.) நடவடிக்கை எடுக்கும் வண்ணம் அனைத்து அமைச்சுக்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்: ஆர். எஸ் ஜயரத்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.